மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பம்ப் செட்டுகள் பழுதடைந்த உடனேயே அவைகளை தூக்கி எறிந்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக புதியதாக வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்வது சரியல்ல. என்ன பழுது ஏற்பட்டிருக்கிறது, அவைகளை சரி செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த ஹெலன் குடிநீர் திட்டப் பணிகளின் ஆய்வு வெகு விரைவிலே முடிவு அடையும். அது வாரியத்தின் ஆய்வில் உள்ளது. செயலுக்குக் கொண்டு வருவதற்கு வெகுவிரைவிலே அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர் இடங்களிலே அமைதியாக உட்காருவது நல்லது.

(26) குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களின் குடிநீர் பிரச்சனை.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், குறும்பனை, வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய பகுதிகளிலுள்ள குடிநீர் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக கஷ்டப்படும் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரைக் கிராமங்களான முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன்காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. கீழ்குறும்பனை கிராமத்தில் உள்ள குடிநீர் திட்ட நீருந்து மோட்டார் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. குடிநீர் குழாய்கள் துருபிடித்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை பழுதுபார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். தற்போது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் பக்கத்தில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் இரு பொதுக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் முட்டம், கடியப்பட்டினம், வாணியக்குடி, சைமன் காலனி ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் சீராக தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்

கவன ஈர்ப்புகள்

(திரு. எப். எம். இராசரத்தினம்)

பட்டிருக்கிறது. ஆனால் கடியப்பட்டினம் பகுதிக்கான குடி நீர் திட்டத்திற்கு 10 நாட்களுக்கு முன்புதான் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அந்தப் பகுதியில் இன்னும் குடி தண்ணீர் வழங்கப்படவில்லை.

மேலும் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் முட்டம் பகுதியிலே இருக்கிற குடி தண்ணீர் பிரச்சினை பற்றி கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு 5 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் அந்தப் பகுதியில் அந்தப் பணி நடைபெறவில்லை. மேலும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தினமும் பேருந்துகளிலும் கால்நடையாகவும் நடந்து சென்றுதான் குடி தண்ணீர் கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் லசமன் காலனி குடி தண்ணீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் அசுத்தம் கலந்த ஆற்று நீரும், குடி தண்ணீர் வழங்குகின்ற கிணற்று நீரும் ஒன்றாக கலந்து அந்தப் பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு பயன் பெறாத நிலையில் இருக்கிறது. அவர்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். வாணியக்குடி, கீழ்குறும்பனை ஆகிய பகுதிகளிலே போடப்பட்ட குழாய்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இவைகளைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கடலோரக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வழங்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அனைத்தையும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(27) காவேரி படுகை விவசாயிகளுக்கு தமிழ்நாடு வாணிபக் கழகம் வழங்கும் இலவச உரக் கூப்பன்கள்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் கடந்த குறுவை அறுவடையின் போது மாநில உணவு வழங்கும் கழகத்தின் கொள்முதல் திட்டத்திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கு ஊக்கப் பரிசாக உரம் இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான அடையாள வில்லைகள் கொடுக்கப்பட்டன. அவற்றில் காலவரையறை ஏதும் குறிப்பிடப்படாமல் இருந்த காரணத்தால் தேவையானபோது, இலவச உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றிருந்த போது எதிர் பாராத வகையில் காலக்கெடுவை நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டதால் பெரும்பாலான விவசாயிகள் அப்பயனை அடைய முடியாமல் போய்விட்டமையால் அக்கால கெடுவை நீட்டித்து அரசாணை வெளியிடுவதன் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகள்